அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்** :112/2017

**தேதி** : 10/10/2017

## கல்லூரி மாணவர்களின் விபரீதப் போக்கு.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் வருத்தம்

நேற்று கல்லூரி மாணவர்கள் சிலர், மின்சார ரயிலில் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களைக் கையில் ஏந்திக்கொண்டு கூச்சலிட்டவாறே பயணித்தும், ரயில் நிலைய நடைமேடையில் பட்டாசுகளை வெடித்தும் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ரயிலில் பயணித்த பயணிகளுக்கும், நடைமேடையில் இருந்தவர்களுக்கும் அதிர்ச்சி ஏற்பட்டு, அவர்கள் அலறி ஓடும் அளவிற்கு சில மாணவர்கள் நடத்திய இந்த விபரீத செய்கை கவலையும், வேதனையும் அளிப்பதாக உள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரிப் பருவம்தான் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்கிறது. இக்காலகட்டத்தில் கற்றிடும் கல்வியும், பெற்றிடும் ஒழுக்கமும், நற்பண்பும் அடுத்த தலைமுறையினரின் அடையாளத்தை செம்மையாக்குகிறது. இவை தவிர்த்து பிற வெளி தாக்கங்களில் மாணவர்களின் கவனம் திரும்பும்போது, அவர்களது வாழ்வும் திசை திரும்பிவிடும் அபாயம் ஏற்பட்டுவிடும். கல்லூரி மாணவர்களின் இடையே விளையாட்டு போட்டிகளும், பல்வேறு திறன்களை வெளிக்காட்டும் போட்டிகளும், மதிப்பெண் பெறுவதில் போட்டிகளும் இருக்கலாமே தவிர வேறு எந்த சண்டை சச்சரவுகளும் இருக்கக் கூடாது.

பொதுமக்களைவிட, இது போன்ற செயல்களில் ஈடுபடும் மாணவர்களின் பெற்றோர்களின் மனங்கள் எந்த அளவிற்குப் புண்பட்டிருக்கும் எனபதை மாணவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு சில மாணவர்களின் எதிர்மறை வினைகள், ஒட்டுமொத்த மாணவ சமுாயத்தின் மீது களங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பதையும் இம்மாணவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மாணவர்களின் சக்தி என்பது அளப்பரிய சக்தி. சாதனைகளையும், சரித்திரங்களையும் படைக்கவேண்டிய ஆற்றல்மிகு சக்தி.அடுத்த தலைமுறைக்கும், எதிர்காலத்திற்கும் நம்பிக்கை ஊட்டக்கூடிய சக்தி. வருங்கால வளமையின் தற்கால மூலதனம். இந்த சக்தி சின்னச்சின்ன விஷயங்களுக்காக விரயம் ஆகிவிடக்கூடாது. எனவே பெற்றோர்களின், பொதுமக்களின் நம்பிக்கை வீண்போகாமல் நடந்து மாணவர்கள் வெற்றிச் செல்வங்களாக உயர வேண்டும் என்பதே அனைவரின் ஆவலும் அக்கறையும். ஆகவே, விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடக்கூடாது என்ற மன உறுதியோடு மாணவர்கள் தங்கள் கல்விப் பருவத்தை நிறைவு செய்து வளமான எதிர்காலம் நோக்கிப் பயணிக்கவேண்டும் என்று மாணவ சமுதாயத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

அங்கும் இங்குமாக அவ்வப்போது நிகழும் ஆயுதக் கலாச்சாரச் செயல்கள் மாணவர் மத்தியில் நுழைந்துவிடக் கூடாது. எனவே,அரசும், காவல்துறையும் சமூக விரோதிகளை ஒடுக்குவதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com